மினி லயன்

# மரண சர்க்கஸ்!



ரூ. 1/-

# விற்பனையாகிறது!



**முழு வண்ணத்தில் முழுநீளச் சித்திரக் கதை!**





**ரூ. 1.25**

# உலகம் சுற்றும் அலிபாபா!


மரண
சர்க்கஸ்!
சர்க்கஸ் .! —பார்வையாளர்-
களுக்கு பரபரப்பூட்டும் கேளிக்-
கை...! — பங்கேற்பவர்களுக்கு,
அது உயிரை பணயம் வைக்கும்
கடின உழைப்பு ..! ஆனால்—
மேஸனுக்கு அங்கே கிட்டிய
அனுபவமோ ...அப்பப்பா...—
படுபயங்கரமானது!



மோட்டார் சைக்கிளில் நெடுந்தூரம் சவாரி போக ஏற்ற, கோடைகால மாலைப்பொழுது... காலெபோர்ட் நகருக்கு வெளியே, நெடுஞ்-சாலையிலிருந்த ஹோட்டலை விட்டு வெளியே வந்தனர் நண்பர்கள் இருவர்...
ஜாலியாக இன்னொரு சுற்று போய் வரலாமா... நிக்கி?
இன்றைக்கு இது போதும்— போய் சூஸியை சந்திக்க வேண்டி-யிருக்கிறது!
மேஸனுக்கு வயது பத்தொன்பது. நிக்கி அவனைவிட ஒரு வயது இளையவன்.
எப்போதும் எதையாவது அலட்டலாக செய்து கொண்டேயிருக்க வேண்டும் போலி-ருக்கிறது..!
தெரிந்த விஷயம் தானே!
மேஸனின் அசட்டுத் துணிச்சல் ஊரறிந்த உண்மை.
உன் மண்டைக்குள்ளே சிக்கிக் கொண்டு ஏதோ ஒன்று வெளியேற துடிக்கிறது. அதுதான் உன்னை இப்படி அலைக்கழிக்கிறது— என்று சொல்வாள் சூஸி.


துறை முகப் பகுதி வழியாக சென்ற சாலையில் அவர்கள் விரைந்து கொண்டிருந்த போது—
கொஞ்சம் மெதுவாகத்- தான் போடா..!


திடீரென்று —
மேஸன்... ஜாக்கிரதை!



மோதலை தவிர்க்க சட்டென்று பைக்கை திருப்பிய மேஸன் வண்டியோடு சறுக்கி விழவிருந்தான், மயிரிழையில் விலகிச் சென்றது அந்த டிரக்...
கிறீச்!
கிறுக்குப் பயல்... ஹெட்லைட்டைப்போடா-மலே இப்படியா சட்டென்று கிளப்பிக் கொண்டு வருவான்? நாம் கொஞ்சம் அஜாக்கிரதையாக இருந்திருந்தால், இந்நேரம் பரலோகம் போயிருப்போம்!
மறு கணம் பைக்கை உச்ச வேகத்தில் செலுத்திக் கொண்டு பறந்தான் மேஸன்...
அவனுடைய மென்னியை முறிக்-காமல் விடப் போவ-தில்லை நான்...!



அந்த டிரக்கின் முகப்பில் மூன்று பேர் உட்கார்ந்திருந்தினர் — முகத்திரை-யிட்டுக் கொண்டு...
நம்மை அவர்கள் துரத்திக் கொண்டு வருகிறார்கள் பாஸ்...!
துறைமுகக் கிடங்கை விட்டு நாம் வேகமாக வெளியேறிக் கொண்டிருந்த போது குறுக்கே வந்தது. அந்த இளைஞர்களின் துரதிர்ஷ்டம்...!
தோழர்கள் இருவரும் அந்த டிரக்கை முந்திச் சென்று, மறிக்கும் நோக்கில் பக்கவாட்டில் வந்து கொண்டிருந்த போது—
மேஸன்... ஜாக்கிரதை — வண்டியை நம் பக்கமாக திருப்புகிறான்!
நம்மை தீர்த்துக் கட்டி விடும் தீவிரம் தெரிகிறது...


மேஸனின் கணிப்பு சரியே— டிரக் அவர்களை பலமாக இடித்து விட்டு விரைந்தது ..
ணங்!
ஆஆ... வ்வ்!


அசட்டுத் துணிச்சல் கொண்ட மேஸனுக்கு இம்மாதிரி நெருக்கடியை சமாளிக்கும் ஆற்றல் இருந்ததால் சமாளித்துக் கொண்டு விட்டான். ஆனால்— நிக்கி ...
ஆவ்வ் ..
இப்படி உள்ளே வந்துவிடு— நிக்கி!



கூடுதல் வேகத்தோடு விரைந்து இருளில் மறைந்து விட்டது அந்த டிரக்.
நிக்கி... என்ன ஆயிற்று உனக்கு?
சுவரருகே சுருண்டு அசைவற்றுக் கிடந்தான் நிக்கி.
சுவரில் பலமாக மோதிக் கொண்டு விட்டான் போலும் மிக மோசமாக அடிபட்டி ருக்கிறது.
உதவி கோரி பைக்கில் செல்லலாமா என்று மேஸன் யோசித்து நின்ற கணத்தில், அவ்வழியே தற்செயலாக வந்து சேர்ந்தது, ஒரு போலீஸ் ரோந்துக் கார்.
ஹே... நிறுத்துங்கள்—உதவி ...தேவை!
வண்டியை நிறுத்து டாம்—ஏதோ விவகாரம் போலிருக்கிறது!


இம்மாதிரி சம்பவங்கள் போலீஸ் காரர்களுக்கு அன்றாட நிகழ்ச்சிகள்...
இன்னும் உயிர் இருக்கிறது...! ஆம்புலன்ஸுக்கு தகவல் கொடு... டாம்!
பெயர்— மேஸன்? சரி... இது எப்படி நேரிட்டது?
ஒரு டிரக் கண்மூடித்தனமாக...
ரினோ—3 லிருந்து கண்ட்ரோலுக்கு... துறைமுகத்தினருகே ஒரு சாலை விபத்து—ஒரு நபர் படுகாயமுற்றுக் கிடக்கிறார்.
கண்ட்ரோலிலிருந்து ரினோ-3க்கு- துறைமுக கிடங்கில் கொள்ளை நடந்திருப்பதாக தகவல் வந்திருக்கிறது. கொள்ளையர்கள் டிரக் ஒன்றில் தப்பிச் சென்றதாக இரவுக் காவலாளி கூறுகிறான்.
கிடங்கை விட்டு சீறிக்கொண்டு வந்த அந்த டிரக், எங்களை மோதி கொல்லவிருந்ததால், ஆத்திரம் கொண்டு, அதை துரத்திச் சென்றோம்... அதன் டிரைவர் எங்களை தீர்த்துக் கட்டி விட முயன்றான்
டாம் ஆம்புலன்ஸ் வந்து சேரும் வரை நீ இங்கேயே இரு.



மேஸன் பொய் சொல்கிறானென்று போலீஸார் நினைத்தனர்.
தலையில் பலமாக அடி-பட்டிருக்கிறது... காப்பாற்ற முடிகிறதா பார்ப்போம்!
நான் சொல்வதை நம்புங்கள்...!
நீ பின்னர் உன் வாக்கு மூலத்தில் எல்லாவற்றையும் கூறு. ஆனால் இல்லாத டிரக்கைப் பற்றியெல்லாம் கதைவிட நினைக்காதே. நடந்ததை உள்ளபடி சொல்—அதுதான் உனக்கு நல்லது!
ஆம்புலன்ஸ் அங்கிருந்து அகன்ற பின்னரும், அதிர்ந்து போய் ஒரு கணம் அப்படியே நின்றான் மேஸன்-
உண்மையை நம்ப மறுக்-கிறார்களே!
துண்டுத் துணி ஒன்று அருகே கிடப்பதை தற்செயலாக கவனித்தான் மேஸன்...
நிக்கியின் அருகே நான் வந்த போது அவன் இதைக் கையில் பற்றியிருந்தான்... டிரக்கிலிருந்து கிழித்-தெடுத்திருப்பானோ?


ஒரு மணி நேரம் கழித்து— நகர பொது மருத்துவமனையில்...
அவனுக்கு எப்படியிருக்கிறது... டாக்டர்?
'கோமா'விலிருந்து இன்னும் மீளவில்லை—ஒருவேளை கடைசி வரை மீளாமலும் போகலாம். பைக்கை கண்மூடித்தனமாக விரட்டினால், இம்மாதிரி அசம்பாவிதங்களுக்கு எப்போதும் தயாராக இருக்க வேண்டியது தான்!
நிக்கியின் தாயாரும், அவனுடைய தோழி சூஸியும் வந்து சேர்ந்தார்கள்...
இப்போது உங்களுக்கு திருப்திதானே மிஸ்டர் மேஸன்! உங்களைப்பற்றி நிக்கியிடம் பல முறை எச்சரித்திருக்கிறேன்... ஹூம்— அவர் கேட்கவில்லை!
சூஸி... இந்த விபத்துக்கான காரணம்— நீ நினைக்கிற மாதிரி இல்லை...


ஆனால் போலீஸாரைப் போலவே சூஸியும் மேஸனின் பொறுப்பற்ற டிரைவிங்தான் விபத்துக்கு காரணம் என்று நம்பினாள்...
ஒரு வேளை நிக்கி இறந்து போனால், பழி நிச்சயம் உங்களைத்தான் சாரும்...!
சூஸியின் குற்றச்சாட்டில் ஓரளவு உண்மை இருக்கிறது. நான் மட்டும் அந்த டிரக்கை துரத்திச் சென்றிராவிடில் இந்நிலை ஏற்பட்டி-ருக்குமா....?
பேப்பரில் இருந்த ஒரு செய்தி, இன்னமும் மேஸனின்பையிலிருந்த துண்டுத் துணியை நினைவூட்டியது...
இம்மாதிரி விநோதமான டிஸைன் போட்ட துணிகளை சர்க்கஸில்தான் காணலாம்...!
ON WAR
YOUR LAST CHANCE TO SEE THE CIRCUS


முதல் நாள் தானும் நிக்கியும் கடந்து வந்த சர்க்கஸ் மைதானத்தை நோக்கி விரைநதான் மேஸன்.
ROLLO'S CIRCUS
துறைமுக கிடங்கில் கொள்ளை-யடித்த கயவர்கள் சர்க்கஸை சேர்ந்தவர்-களோ என்று சந்தே-கிப்பது பைத்தியக்-காரத்தனமானது என்றாலும் இப்-போதைக்கு அப்படித் தான் நினைக்க வேண்டியிருக்கிறது ..!
அட்டகாசமான உடையில், முரட்டு பைக்கை, அலட்சியமாக ஓட்டி வந்த இளைஞனை பார்த்து முறுவல் செய்தார்— சர்க்கஸ் முதலாளி... ஜாக் ரோலோ!
இந்தக் கம்பி வலுவிழந்து விட்டது... முதலாளி!— மாற்ற வேண்டும்...!
ஓகே... ஏற்பாடு செய்-கிறேன். அங்கே பார்— கார்ஸனுக்கு உபயோகமாகக் கூடிய ஓர் இளைஞன் வருகிறான்!



மரணக் கிணறு நிகழ்ச்சியில் பங்-கேற்க விரும்பி, தான் அங்கே வந்தி-ருப்பதாக எப்படி ரோலோ கற்பனை செய்து கொண்டார் என்று மேஸன் குழம்பினான்.
மரணக் கிணறு
காலி-யிடத்தில் உன்னை சேர்த்துக் கொள்ளுமுன் உன் திறமையை சோதித்தறிய விரும்புகிறேன்...
மைதானத்தை சுற்றிப் பார்த்து ஆராய, வலிய வந்துகிடைத்த வாய்ப்பாக அதை கருதிய மேஸன் வாயைத் திறக்காமல், ஒப்புக் கொண்டான்.
ரொம்ப உயரத்-துக்குச் செல்-லாதே... கட்டுப் படுத்தியே ஓட்டு!
முன் அனுபவம் இல்லாத போதிலும் மிக சிறப்பாகச் செய்தான் மேஸன்...
நான் தேடி வந்த அயோக்கியர்கள் இங்கே இருக்கும் பட்சத்தில், விரைவி-லேயே அவர்களை இனம் கண்டு கொள்ள அனைத்தையும் செய்வேன்...



சிந்தனை வேறு போக்கில் செல்ல, அவனையும் அறியாமல் விளிம்புக்கே சென்று விட்டான்...
போதும்... போதும்— இறங்கி வா... உன்னை எடுத்துக் கொள்வதென்று தீர்மானித்து விட்டேன்!
நன்றி... மிஸ்டர் கார்ஸன்!
இதற்கு முன் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று வந்த நபர், கவனக் குறை-வாக விளிம்புக்கும் மேலே சென்று எலும்புகளை முறித்துக் கொண்டார்... நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்!
வேலையை நான் ஒப்புக் கொள்ளுவதற்கு முன், இரண்டு காரியங்களை செய்து முடிக்க வேண்டி-யிருக்கிறது....


சற்று நேரத்திற்கெல்லாம் போலீஸ் தலைமையகம் சென்றடைந்தான் மேஸன்-
கொள்ளையர்கள் பற்றி எந்த துப்பும் கிடைக்க வில்லை. அவர்கள் சென்ற டிரக்கை கட்டாயம் யா— ரேனும் கவ— னித்திருக்கக் கூடும்—
உங்களைத் தேடி ஒரு இளைஞர் வந்திருக்கிறார் இன்ஸ்பெக்டர்!
விபத்து பற்றிய கேஸ் இன்னும் முடிவு பெறாத நிலையில், தான் நகரைவிட்டு வெளியேறும் விஷயத்தை போலீஸுக்கு தெரியப் படுத்த வேண்டியது அவசியம் என்று நினைத்தான் மேஸன்-
ஓ .. தாராளமாக போகலாம் நீ...!
அடுத்து — மருத்துவமனைக்குச் சென்றான்...
நிக்கி இன்னமும் 'கோமா' விலிருந்து மீளவில்லை. இந்த நிலை இன்னும் எத்தனை நாட்களுக் கோ? நீ இப்போது வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம்...


தன் முதலாளியோடு போனில் தொடர்பு கொண்டான் மேஸன்...
சொல்ல வேண்டி-யவர்களிடம் சொல்லி-யாகி விட்டது. இனி யாரும் இங்கே என்னைத் தேட மாட்டார்கள்...
என்ன? வேலையை விட்டு விலகிக் கொள்கிறாயா- ரொம்ப சந்தோஷம் மேஸன்! கொலைகாரனை வேலைக்கு வைத்திருப்பதில் கம்பெனிக்கு எத்தனை கெட்ட பெயர் ஏற்படுகிறது தெரியுமா?


மேஸன் மீண்டும் சர்க்கஸ் மைதானத்தை நோக்கிச் சென்றான் — ஒரு தீர்மானத்தோடு...


கார்ஸனைத்தேடி மேஸன் சென்று கொண்டிருந்தபோது ரோலோ எதிர்ப்பட்டார்.
உங்களுக்கு அதில் மறுப்- பேதும் இல்லையே?
உன்னை அமர்த்திக் கொள்ள கார்ஸன் சம்மதித்து விட்டாரா... என்ன?
அப்போது அங்கே வந்து சேர்ந்தார் கார்ஸன் ...
என் சகாக்களை வேலைக்கு அமர்த்திக் கொள்வதும், வெளியேற்றி அனுப்புவதும் என் இஷ்டம்...
இல்லை என்று நான் சொல்ல வில்லையே! சும்மா! தெரிந்துகொள்ள— லாமே என்ற ஆவ லில் அப்படிக் கேட்டேன்—
மரணக் கிணறும் பிரிக்கப்பட்டு டிரக்கில் ஏற்றப் பட்டது—
பார்வைக்கு அப்பாவி மாதிரி இருக்கிருரே. தவிர உள்ளுக்குள் ரொம்ப அழுத்தமான ஆசாமி அந்த ரோலோ--சுலபமாக முட்டாள் பட்டம் கட்டி விடுவார்—எச்சரிக்கை யாக நடந்து கொள்-
என்னை யாருமே முட்டாளாக்க அனுமதியேன், மிஸ்டர் கார்ஸன்!

F-


மறுநாள் காலெபோர்ட்டை விட்டு புறப்பட்டது அந்த சர்க்கஸ் கம்பெனி— அடுத்த நகரை நோக்கி...
கில்வர்ட்டனில் மூன்று வாரம் நிகழ்ச்சி நடைபெறும் முதல் காட்சிக்கு முன், நாளை ஒத்திகை நடக்கும்.
ROLLO'S CIRCUS
ROL CIRC


மறுநாள்— பயிற்சித்தளத்திலிருந்து நழுவி பிரதான கூடாரத்தை நோக்கி நடந்தான் மேஸன்...
இந்த துண்டுத் துணியின் பின்னே மறைந்து கிடக்கும் உண்மையை ஆராய்ந்து அறிய இது அருமையான சந்தர்ப்பம்...


மற்றவர்கள் அங்கே ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தனர் .. பிரதான களத்தின் பின்னே இருந்த நடைபாதை சந்தடியற்று இருண்டு கிடந்தது.
கோமாளிகளின் உடுப்புக்கள் — அட... அந்த மேலாடை...!
தேடி வந்தது அகப்பட்டு விட்டது...
கிழிசலில் சரியாகப் பொருந்துகிறது...!
அந்த உடுப்பை மேஸன் உருவி எடுக்க முனைந்தபோது, வேடம் தரித்த ஒரு முகம் சட்டென்று அங்கே தோன்றியது...
ஆவ் . வ்!


சட்டென்று பாய்ந்து மேஸனின் கையி-லிருந்த துண்டுத் துணியை பறிக்க முனைந்தான்...
கொடுப்பதற்-கில்லை .! எனக்கு உன்னிடமிருந்து சில விஷயங்கள் தெரிந்தாக வேண்டும்!
அது எங்கே-யிருந்து கிடைத்தது உனக்கு? உன் நோக்கம்தான் என்ன? அதைக் கொடு இப்படி..!
மரணக் கிணறு நிகழ்ச்சியில் மேஸனோடு பங்கேற்கும் சகா தீடீரென்று அங்கே வந்து சேர்ந்தான்...
உன்னை எங்கே-யெல்லாம் தேடுவது...? வா— போய் பயிற்சி எடுத்துக் கொள்வோம்!
பிறகு பேசிக் கொள்வோம்... அதுவரை வாயை மூடிக் கொண்டிரு— புரிகிறதா!


அந்த துண்டுத் துணியை மீண்டும் பைக்குள் திணித்துக் கொண்டு நடந்தான் மேஸன்...
நிறைய பயிற்சி செய்யா- விடில் ஆபத்து நேரிடலாம் சமீபத்தில் ஒரு நபர் பரிதாபமாக செத்துப் போய் விட்டார்... மறு படியும் இன்னொரு விபத்து நேர்ந்து விடக் கூடாது என்று கார்ஸன் ரொம்ப கவலை- யோடிருக்கிறார்...
எனக்கு மட்டும் உயிரைப் போக்கிக் கொள்ள ஆசையா ...என்ன?
மரணக் கிணறு
அடுத்த ஒரு மணி நேரத்திற்கு கருமமே கண்ணாக பயிற்சியில் ஈடுபட்டான் மேஸன்...
ம்... வேகத்தை உச்சப்படுத்து, மேஸன்!



பில் அவ்வப்போது பேசிக் கொண்டே-யிருந்தான் ...
பிரமாதமாக பண்ணு-கிறாய்... தம்பி!
ம் ... மூடு வாயை— முழுக்கவனமும் ஆட்டத்தில் இருக்கவேண்டும்!
வேறு ஏதும் பேசாமல் வெளியேறிச் சென்று விட்டார் கார்ஸன்...
அன்றிரவு முதல் நிகழ்ச்சி தொடங்கியது...
ஏன் இப்படி எரிந்துவிழுகிறார்— உன்னிடம்?
நான் சொன்னே-னே... அந்த விபத்து நடந்த போது உடன் பங்-கேற்றுக் கொண்டி-ருந்தவர் கார்ஸன்... அதன் பின்தான் இப்படி!
வாருங்கள் கனவான்களே... திகிலூட்டும் மரணக் கிணற்றைக் காணவாரீர்... மரணத்தோடு விளையாடும் இளைஞர்களின் சாகஸங்களைக் கண்டு களிக்க வாரீர்...



அதையத்து, பில்லும் மேஸனும் நிகழ்த்திய மயிர்க் கூச்செறியும் சாகஸ விளை-யாட்டைக் கண்டு களித்துக் கொண்டி-ருந்தது பெரும் கூட்டம்...
மேஸனின் முதல் நிகழ்ச்சி நல்ல-படியாக முடிந்தது...
கார்ஸன் எங்கே போனர்? எனக்கு சில நிமிட ஓய்வு தேவைப்-படுகிறது...!
நாம் நிகழ்ச்சி-யை தொடங்கிய பின் கார்ஸன் கண்ணில் பட வேயில்லை... உனக்கு ஓய்வு நேரம் அரைமணி உண்டு.
அந்த கோமாளி வேடதாரிக்கு விஷயம் தெரிந்திருக்கிறது. அவனை தேடிப் பிடித்து வாயைக் கிளற வேண்டும்.
அதோ... அங்கே நிற்பது—அவனேதான்!


நிகழ்ச்சிக்கான உடுப்பிலிருந்த அவன் வேறு யாருடனோ பேசிக் கொண்டிருந்தான்.
ஐயோ... கொஞ்சம் மெதுவாகவே பேசுங்கள்!
ஓ...கே. நார்ம்— என்ன விவகாரம்?


இருட்டில் தன்னை மறைத்துக் கொள்ள மேஸன் ஓரமாக ஒதுங்கிய போது, ஏற்கனவே அங்கே மறைந்து நின்ற வேறொரு நபரோடு மோதிக் கொண்டான்...
யாரது...?
நம்மை யாரோ கவனிக்கிறார்கள்...!


மறுகணம்— மூன்று ஆசாமிகளும் ஓட்டம் பிடித்தனர்... பிரமித்துப் போன மேஸன் மட்டும் அங்கே தனித்து நின்றான்.
இங்கே என்னதான் நடக்கிறது... என்னைத் தவிர வேறொரு ஆசாமியும், அந்த கோமாளி-யையும் அவனோடு பேசிக்கொண்டி-ருந்தவனையும் வேவு பார்க்கக் கிளம்பி யிருக்கிறான்!
திரும்பி நடந்த மேஸன், பிரதான அரங்கினுள் வந்தான்... கூட்டம் நிரம்பி வழிந்தது. மேஸன் தேடி வந்த கோமாளி அரங்கத்தில் இருந்தான்.
அவன் அரங்-கத்தை விட்டு வெளியேறி வரும் வரை காத்திருப்-பதைத் தவிர வேறு வழியில்லை!
அடுத்து— நீங்கள் பெரிதும் விரும்பி இரசிக்கும் 'ஓவியனும்— கோமாளிகளும், நிகழ்ச்சி....


காட்சி தொடங்கியது—
ஆயார்...!
க்ரூ...ஊ!
அந்த வேடிக்கை நிகழ்ச்சியை பெரிதும் இரசித்த ஜனங்கள் விழுந்து விழுந்து சிரித்தனர்...
யீயீயீஈஈ!
ROLLO ☆
ROLLO
☆ ROLLO ☆
ஹா! ஹா!



ஓவியம் தீட்ட முயன்ற கோமாளி, கீழே விழுந்து, வேடிக்கையாக ஆ வென்று வாயைப் பிளக்க இரண்டு பிரஷ்கள் பசையை அவனுடைய முகம் முழுவதும் அப்பின...
அஹ்ஹ
அந்த வேடிக்கை நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருந்த மேஸன் கூட தன்னை மறந்து சிரித்து விட்டான்-
ஊப்ப் ..
டிரக் விவகாரத்தில் அவனுக்கும் பங்கிருக்கலாம்— ஆனால் தொழிலில் ஆசாமி ரொம்ப திறமைசாலி என்பதில் சந்தேகமேயில்லை!
காட்சியின் உச்ச கட்டத்தில் மற்ற கோமாளிகள் தங்களுடைய சகாவை சுவரொட்டி காகித உருளைக்குள் வைத்து உள்ளே தூக்கிச் சென்றனர்...
தூள் பண்ணி விட்டீர்கள்... பலே!
அவனுக்காக வெளியே காத்திருப்பேன்


திடீரென்று பொறி தட்டியதுபோல் மேஸனுக்கு ஒரு சந்தேகம்—
இன்னமும் ஏன் அவன் வெளியேறி வரவில்லை...
ROLL
தன் சோதனையை சுருக்கமாக முடித்துக்கொண்டு விட்டார் டாக்டர்—அவர் செய்வதற்கு ஏதும் இல்லாமற் போனதே காரணம்—
நூலைப் பிரித்து ஆசாமியை வெளியே கொண்டு வந்தான் மேஸன்...
வரவில்லை!
என்னது— சார்லி ஓடு... டாக்டரை அழைத்துவா!
இறந்து விட்டான்...! இந்தப் பசைதான் மூச்சு முட்டச் செய்திருக்க வேண்டும்!



ஏக பரபரப்பாகி விட்டது...
வழக்கம் போலத்தான் பசையை தயாரித்தோம்... எப்போதும் போல் நார்ம் தான் கலந்தான்.
யாரையும் குறை கூறுவதற்கில்லை... எப்படியோ நிகழ்ந்து விட்டது இந்த விபரீதம்!
ஆனல் அது ஒரு திட்டமிட்டு நடத்தப்பட்ட கொலை என்று உறுதியாக நம்பினன் மேஸன்...
பணியை மறந்து விட்டு இங்கே சுற்றிக் கொண்டி நந்தால் எப்படி... மேஸன்
அதிர்ச்சியிலிருந்து இன்னமும் விடுபடாத மேஸன் கார்ஸனை பின் தொடர்ந்தான...
மரணக் கிணறு
அநியாயமாக ஓர் உயிர் பலி-யாகி விட்டது கார்ஸன்.
என்ன செய்வது... இந்தத் தொழிலில் இதெல்லாம் சகஜம்...!


மரணக் கிணற்றினுள் பில் காத்துக் கொண்டிருந்தான்.
இல்லை — அவனால் யாருக்-கோ இடைஞ்சல் ஏற்பட்டிருக்க வேண்டும்...
செய்தியை கேள்விப்பட்டேன் மேஸன். நார்ம் யாருக்கும் எந்த கெடுதலும் செய்த-தில்லை பாவம் ..!
உள்ளுக்குள் பொங்கி யெழுந்த சினமும், ஆத்திரமும் பைக்கை அவன் கிளப்பிய விதத்தில் வெளிப்பட்டது...
ஹே... என்ன ஆயிற்று உனக்கு— நிதானம்... தேவை!


கொஞ்சம் கொஞ்சமாக உணர்ச்சிகள் கட்டுக்குள் வந்தன...
ஆட்டத்தில் கவனம் செலுத்த வேண்டும்— இல்லையேல் ஆபத்-தாகிவிடும்!


தற்செயலாக 'பைக்'கின் முகப்பு விளக்-கொளியில் தென்பட்ட முகம் ஏற்கனவே அறிமுகமானதாக பட்டது...
நார்ம் இறந்து போகுமுன் சந்தித்துப் பேசிய நபரல்லவா இவன்?


அதிர்ச்சியில் ஒரு கணம் செயலிழந்து போனான் மேஸன்...
சைத்-தானே... விலக்கி ஓட்டு!
ஸாரி... பில்!
அதன் பின் மனத்தை ஒரு-முகப்படுத்தி ஆட்டத்தில் முழுக்கவனம் செலுத்தினான் மேஸன்...
இன்னொரு முறை அம்-மாதிரி தவறு செய்தாயோ, வெளியேற்றி விடுவேன்...!
கவனம் சிதறி விட்டது மிஸ்டர் கார்ஸன்... மறுபடியும் அம்-மாதிரி தவறு நேரிடாது!
கண்ணைக் கூச வைக்கும் ஒளி வெள்ளத்திலிருந்து விலகி நிழல்களினூடே நடந்தான் மேஸன்....
அதே ஆசாமி தான்...!


கொஞ்சமும் எதிர் பாராத முறையில் கோபாவேசமாக மேஸன் மீது பாய்ந்தான் அந்த மனிதன்...
கும்!
யார் நீ... எதற்காக என்னை— ஆ ஆ...
விரைவிலே-யே தெரிந்து கொள்வாய் ...


அதிர்ச்சியில் செயலிழந்து போன மேஸனை, அருகே பூட்டிக்கிடந்த அரங்கினுள் தள்ளிக் கொண்டு போனான்...
பிசாசு ரெயில்
CLOSED
உள்ளே, இடையூறு இன்றி சாவகாச-மாக பேசலாம்!
அஅஹ்... விடு—


'பிசாசு ரயில்' அரங்கினுள் மேஸனுக்கு இரண்டாவது அதிர்ச்சி — ஆனால் வர-வேற்கத்தகுந்த ஒன்று— ஏற்பட்டது..
நார்ம் என் நண்பன், அவனை யார் கொன்றது, எதற்காக என்று கண்டறிய முயன்று கொண்டிருக்-கிறேன். அதற்காக இந்த சர்க்கஸையே தலை கீழாக புரட்டவும் தயங்க மாட்டேன்...
அப்படி-யானால் நாம் இருவரும் ஒரே அணிதான்!


மேஸன் வேகமாக பேசலானான்...
நார்ம் சம்பந்தப்-பட்ட ஒரு திருட்டுக் கும்பல் என் தோழன் ஒருவனை ஏறத்தாழ கொன்று விட்டார்கள். இந்த சர்க்கஸில் நான் சேர்ந்ததே அவர்களை கண்டு பிடிக்கத்தான்.


எதிரிகள் அவனை தீர்த்துக் கட்டுமுன், அவனோடு நான் பேசியபோது, ஏதோ அவனுடைய மனத்தை அரித்துக் கொண்டிருப்பதாக உணர்ந்தேன். நான் அவனுக்கு உதவ முடியும் என்று அவன் எதிர்பார்த்திருக்கலாம்-ஏனெனில் நான் ஒரு போலீஸ் அதிகாரி!
அதைக் கேட்டு திகைத்துப் போன மேஸன் தன் கதையை எடுத்துரைத்தான்...
நிக்கியை ஏறத்தாழ கொன்று விட்ட டிரக் இந்த சர்க்கஸிலிருந்து வந்தது என்பது உறுதி, துறைமுக கிடங்கை கொள்ளையடித்தவர்களும் இவர்களாகவே இருக்கலாம்.
நீ மிகுந்த எச்சரிக்கையோடு நடந்து கொள்ள வேண்டியது அவசியம்... மேஸன்! கொலைக்கு அஞ்சாத பாவிகள் இவர்கள்!


மறுநாள் காலை— ஆட்டக்காரர்கள் பிரதான அரங்கில் ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கையில் உள்ளே போய்ச் சேர்ந்தான் மேஸன்...
ஓ...'மரணக் கிணறு' புது கதா- நாயகனல்- லவா... நீ!
கோமாளி- களில் ஒருவன் கொலைகார கூட்டத்- தை சேர்ந்தவன்... விஷயத்தை எப்படி இவர்களிட- மிருந்து கறப்பது...?
அழைத்தவன்— இத்தாலிய நாட்டு ஆட்டக்- காரன் மானியோ...
பைக்கில் ஏதே- தோ சாகஸம் செய்து விட்டால் போதுமா இப்படி மேலே வந்து என்னோடு ஆட்டத்தில் பங்கேற்க நெஞ்சில் திடம் இருக்கிறதா உனக்கு?
அப்படி- யொரு சந்தே- கமா உனக்கு இதோ—


நூலேணி வழியாக ஏறிய மேஸன் உச்சியை நெருங்கி விட்டபோது, தொங்கு கட்டை-யை இழுத்துப் பிடித்திருந்த கயிற்றை விட்டு விட்டான் மானியோ...
நூலேணி வழியாக ஏறி-வருவது ஒன்றும் பெரிய வித்தை இல்லை தம்பி! ட்ரபீஸில் காண்பி உன் சாமர்த்தி-யத்தை!
ஏய்...!


கட்டையை ஒரு கையால் பற்றியவாறு அந்தரத்தில் ஊசலாடிய மேஸனுடைய நெஞ்சு படபடத்தது...


மீண்டும் புறப்பட்ட இடத்தை நோக்கி மேஸன் திரும்பி வந்தபோது, மானியோ பாய்ந்து வந்தான் ...
இதோ — உன்னோடு சேர்ந்து கொள்ள வருகிறேன்.
என்னை எப்படியாவது தீர்த்து கட்டி விடுவது என்று தீர்மானித்து விட்டானா?


அந்த இத்தாலியன் தன்னை சோதித்தறிய முற்படுகிறான் என்பதை, மேஸன் விரை-விலேயே தெரிந்து கொண்டு விட்டான்
அபார துணிச்சல் இருக்கிறது உன்னிடம் அதை தெரிந்து கொள்ளவே இம்-மாதிரி செய்தேன்.
என்ன சொல்ல வருகிறாய் நீ?


சீக்கிரமே குறுக்கு வழியில் பணக்காரனாக உனக்கு விருப்பமா? — ஆசையிருந்தால் சொல்... உனக்கு நான் உதவ முடியும்!
ஓ... அப்படிப் போகிறதா கதை...!
கோமாளிகளில் ஒருவனும், அந்தரத்தில் கம்பியில் சாகஸம் செய்பவனும் மேலே நடப்பதை கவனித்துக் கொண்டிருந்தார்கள்...
பாஸுக்குத் தெரியாதா, எதை எப்படி செய்ய வேண்டுமென்று? நீஏன் வீணாக அலட்டிக் கொள்கிறாய், விக்டர்! நார்ம் இறந்து விட்டதால், திறமையான புது டிரைவர் அவசியப் படுகிறதல்லவா?
அந்தப் பொடியனையும் நம்மோடு சேர்த்துக் கொள்ள மானி-யோ தூண்டில் போடுகிறான்... எனக் கென்னவோ அது சரியாகப் படவில்லை.


பத்து நிமிட நேரம் நீடித்த இரகசிய உரையாடலின் முடிவில் ...
எனக்கு சம்மதம்தான். எப்போது நான் வர வேண்டும்?... எங்கே?
ஓரிரு நாட்களில்...! மற்ற விபரங்களை பாஸ் பின்னர் தெரிவிப்பார்.


அப்போது சர்க்கஸ் உரிமையாளர் ரோலோவும், கார்ஸனும் அந்தப் பக்கமாக வந்து சேர்ந்தார்கள்...
பாஸ் அதோ போகிறார்— ஆனால் அவரிடம் இதைப் பற்றி பேச்செடுக்காதே. சர்க்கஸ் மைதானத்தினுள் இது சம்பந்தமாக எதையுமே பேச அவர் விரும்புவதில்லை!
புரிகிறது ..!


மேஸன் விரைந்து வெளியேற முனைந்த போது, ரோலோ அவனைப் பார்த்து முறுவலித்தார்...
பிரமாத-மாக செய்கிறாய் என்று கேள்விப்-பட்டேன்... நீயும் எங்களோடு சேர்ந்து கொண்டது பற்றி மகிழ்ச்சியடை-கிறேன்.
நன்றி மிஸ்டர் ரோலோ எப்போதும் என் பங்குப்-பணியை திறம்பட செய்வேன்— என்னை நீங்கள் நம்பலாம்!


ரோலோ என்ன கேட்டார்... உன்னிடம்?
குறிப்பிடும் படியாக எதுவும் இல்லை மிஸ்டர் கார்ஸன்.
கார்ஸனைப்பற்றி மிக உயர்வான எண்ணம் கொண்டிருந்தான் மேஸன். திருட்டு, கொலை விவ-காரங்களுக்குள் அவரை இழுக்க அவனுக்கு இஷ்டமில்லை—


அடுத்த மூன்று தினங்களுக்கும், பார்வையாளர்கள் மகிழ்ந்து பாராட்டும் வகையில், சாகஸங்கள் புரிந்தான் மேஸன், அதையடுத்து—
மேஸன்... நாளை நள்ளிரவு— ஐஸ்கிரீம பார்லர் அருகே


நகருக்கு வெளியே தனித்து நின்ற டெலிபோன் கூண்டிலிருந்து, சி. ஐ. டி. ஆபீஸுக்கு போன் செய்தான் மேஸன்.
— நாளை இரவு...! ஆனால்... எங்கே என்றோ, என்ன மாதிரியான விவகாரம் என்றோ இன்னமும் தெரியவில்லை.
அதையெல்லாம் எங்களிடம் விட்டுவிடு, மேஸன்...! சர்க்கஸ் மைதானத்தை விட்டு அவர்கள் கிளம்பியதும் என் ஆட்கள் பின் தொடருவார்கள்...


மறுநாள் இரவு— கடைசி ஆட்டமும் முடிந்த பின், குறிப்பிடப்பட்ட இடத்தை நோக்கி நடந்தான் மேஸன்,
ம்... வேகமாக வா!
நிக்கியை இடித்து விட்டுப் போன... அதே டிரக்!


எதுவுமே பேசாமல் டிரக்கினுள் ஏறி அமர்ந்த மேஸன் கில்வர்ட்டன் செல்லும் சாலைக்கு அதை ஓட்டிச் சென்றான்...
டிரேடிங் எஸ்டேட்டில் ஒரு பெரிய தொழிற்சாலை இருக்கிறது. இன்றிரவு அங்கே பெட்டகத்தில் இருபதினாயிரம் பவுண்டுகள் இருக்கின்றன...
நாளை காலை அந்தப்பணம் அங்கே இருக்கப் போவதில்லை.
முப்பது நிமிடங்களுக்குப் பின் அந்த இரு டிரக்குகளும் நகருக்கு வெளியே இருந்த டிரேடிங் எஸ்டேட்டை சென்றடைந்தன...
கலவரமடைய தேவையில்லை... இதற்கு முன் ஆறு தடவைகள் சாதித்திருக்கிறோம்... ஒரு முறை கூட சிறு தவறும் நேர்ந்ததில்லை...
STENNING CHEMICAL LABORATORY
ஓ. கே... வண்டியை உள்ளே விடு!


டிரக்குகள் தொழிற்சாலையினுள் புகுந்த மறு வினாடி திடீரென்று சில கார் முகப்பு விளக்குகள் பளீரிட்டன...
வளைத்து மடக்குங்கள்... அவர்களை!
ஆ... போலீஸ்!


டிரக்குகளை இரகசியமாக பின் தொடர்ந்து வந்த காரில் இருந்த ரேடியோ மூலம் விடுக்கப்பட்ட செய்தி, பல போலீஸ் ரோந்துக்கார்களை நொடியில் அங்கே, வரவழைத்து விட்டது...
கோமாளி யாரேனும் அவர்களுக்கு தகவல் கொடுத்தி-ருக்கக்கூடும்.
...அது யாரென்று யூகிப்பதிலும் சிரமம் இல்லை!


விக்டர் சட்டென்று மேஸனை தாக்கத் தொடங்கினான் ...
கூட இருந்து கொண்டே குழி பறிக்கிறாயா... நாயே!
ஆ ஆ...!
கும்!


அதிர்ச்சியில் மேஸன் சில கணங்கள் செயலிழந்து போனபோது, போலீஸார் கும்பலை வளைத்துப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர் ...
இரண்டு பேர் அதோ நழுவி ஓடுகிறார்கள்— விரட்டிப் பிடியுங்கள்...!
மானியோவை அத்தனை சுலபத்தில் யாரும் கம்பி எண்ண வைத்து விட முடியாது!



விக்டரும், மானியோவும் தங்களுடைய சிறப்பு ஆற்றலை பயன்படுத்தி போலீஸாரிட-மிருந்து தப்பித்துக் கொள்ள முயன்றனர்...
ஊய்ய்... இவன்கள் சர்க்கஸ் ஆசாமிகள் என்பதை மறந்து விட்டோம்! இவன் கம்பி மீது நடப்பதில் நிபுணன் போலிருக்கிறது!
...சீக்கிரமே அகப்பட்டுக் கொள்வான்.
நாலா திசைகளிலும் பரவி நின்றது போலீஸ் படை.
அங்கே... கவனியுங்கள்!
இனி, அவன் தப்ப முடியாது—


விக்டர் கொடுத்த முரட்டு அடியினால் பொறி கலங்கிப் போயிருந்த மேஸன், சுதாரித்துக் கொண்டு எழுந்த போது—
தலைவன் உள்பட அனைவரையும் பிடித்து விட்டீர்கள்— போலிருக்கிறதே ... இன்ஸ்பெக்டர்?


ரோலோவையும், சி. ஐ. டி. அதிகாரியையும் பார்த்து மேஸன் இதை கூறிக் கொண்டிருந்த போது, திடீரென்று ஒரு மோட்டார் சைக்கிள் அசுர கதியில் அங்கிருந்து கிளம்பிச் சென்றது.
ஹே..!
டிரக்கிலிருந்த மோட்டார் சைக்கிளில் ஒன்றை எடுத்துக் கொண்டு யாரோ தப்பியோடுகிறார்கள், அங்கே, இன்னொரு பைக் இருக்கிறது—


டிரக்கிலிருந்த பைக்கை சட்-டென்று கீழே இறக்கி ஸ்டார்ட் செய்தான் மேஸன்...
மேஸன் ... பொறு!
நீங்கள் ரோலோவை கவனியுங்கள் இன்ஸ்பெக்டர்... இவனை விரட்டிப் பிடிக்க நானாயிற்று!
ஓடயத்தனித்த இன்ஸ்பெக்டரை பிடித்து நிறுத்தினர் ரோலோ...
இந்த சட்ட விரோத செயலில் எனக்கும் பங்கிருக்கிறதாக நீங்கள் நினைக்கிறீர்களா, இன்ஸ்பெக்டர்...
இல்லை— கவலைப் படாதீர்கள்...!
மோட்டார் பைக்கில் தப்பிச் சென்றவன், மேஸனிடம் அகப்பட்டுக் கொள்ளாமலிருக்க, எதிரே இருளில் மூழ்கிக் கிடந்த சிறு திறப்பினுள்ளே புகுந்தான்...
தான் துரத்திச் செல்வது கும்பலின் தலைவனை என்ற உண்மை அந்த இளைஞனுக்குத் தெரியாது!


அந்த திறப்பு, கவிழ்த்துக் கிடந்த பிரம்-
மாண்டமான இரும்பு கோப்பையினுள்
இட்டுச் சென்றது...!
மேஸனுக்கு ஆபத்து— அந்த நபர், குழு தலைவன் மட்டுமல்ல... கொலை செய்யவும் தயங்காத பயங்கரவாதி!
காலியாக கிடக்கும் சேமிப்பு கிடங்கினுள்ளே நுழைந்து விட்டார்கள் ...


உள்ளே கும்மிருட்டாக கிடந்தது. இரண்டு
மோட்டார் பைக்குகளும் எழுப்பிய ஓசை
பயங்கரமானதாக இருந்தது.
அடக் கடவுளே.... பிரம்மாண்ட-மான தொட்டி போலும் இது!


இன்ஸ்பெக்டர் சுவிட்சை தட்டியதும் உள்ளே வெளிச்சம் பரவியது
அவன் மாட்டிக் கொண்டு விட்டான் மேஸன்... வீணாக மோதிப் பார்க்க எண்ணாதே— அவனை எங்களிடம் விட்டு விடு..!


ஆனால் மேஸன் ஒருவித வெறியோடு தன் இரையை குறிவைத்து பைக்கை விரட்டிக் கொண்டிருந்தான்...
இவன் யாராக இருந்தாலும், நானே கணக்குத் தீர்ப்பேன்!


தன் பைக்கை மேஸனின் பாதையில் குறுக்கே திருப்ப முயன்றபோது அந்த நபர் திரும்பி நோக்கினான் ...
கார்ஸன் ...!


மேஸன் இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை!
மேஸன்... ஜாக்கிரதை— உன் பாதையில் குறுக்கிடுகிறான்!


தன்னை நெருங்கி வந்த கார்-ஸனின் விழிகளில் கொலை வெறி மிளிர்வதைக்கண்டான் மேஸன்-


இருவரும் மேற்கூரையருகே உச்ச
வேகத்தில் வட்ட மடித்துக் கொண்டிருந்தனர்...
போலீஸுக்கு தகவல் கொடுத்தது நீதானே— அதற்குரிய விலையை இப்போது நீ கொடுக்கப் போகிறாய்?


ஆங்காரமாக கார்ஸன் தன் வழியில்
குறுக்கிட்ட போது, மேஸன் சட்டென்று
'பிரேக்' போட்டு முன் சக்கரத்தை
திருப்பினான்...
நோ... ஆஆ...


நேர் மேலே விசையோடு தள்ளப்பட்ட கார்ஸனின் பைக் கூரை மீது போய் மோதி கட்டுப்பாடிழந்தது...
ஆஆஆ...


மறுகணம்—
ஐஐ... யோ!



கார்ஸனருகே ஓடிச் சென்றார் இன்ஸ்பெக்டர்...
இன்ஸ்-பெக்டர்— அவர்...?
...இறந்து விட்டார்!
சர்க்கஸ் போகுமிடங்களில் எல்லாம் கொள்ளை நடைபெறும் புதிர் இத்தோடு முற்றுப் பெறுகிறது-மேஸன்!
'மரணக் கிணறு' நிகழ்ச்சிக்கு ஒரு புது ஆட்டக்காரனை சேர்ப்பதோடு ஒரு புது மானேஜரையும் நியமிக்க வேண்டிய சிரமம் ரோலோவுக்கு ஏற்பட்டிருக்கிறது!
காலெபோர்ட்டுக்கு வேகமாக திரும்பி வந்து சேர்ந்தான் மேஸன். மருத்துவமனை வாசலில் போலீஸ் கார் ஒன்று நின்று கொண்டிருந்தது.
இன்ஸ்-பெக்டர்... எனக்காகவா காத்து நிற்கிறீர்கள்?
ஆமாம்... சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் போனில் எல்லா விபரமும் சொன்னார்... உன்னிடம் மன்னிப்பு கோருகிறேன், மேஸன்


உதவாக்-
கரை என்று
உன்னை எண்ணி-
னேன். ஆனால்,
நீ செய்திருக்கும்
சாதனையை,
நிதானமும் மன-
வுறுதியும் இருந்-
தால் மட்டுமே
சாதிக்க முடியும்!


நிக்கியுடன் துணையாக இருந்த அவனுடைய
தோழி வாசலில் தென்பட்டாள்... அவளுடைய
முகத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே
மேஸனுக்கு அவன் அறியத் துடித்த
விபரங்களை புரிந்து கொள்ள முடிந்தது...
நிக்கி எப்படியிருக்கிறா-னென்று என்னிடம் தெரிவிக்க மறுத்து விட்டார்கள்...
நான்தான் அவர்களை கேட்டுக் கொண்-டேன் — எதும் சொல்ல வேண்டா-மென்று...! நிக்கி குணமடைந்து விட்டார்... விரைவிலேயே வீட்டுக்கு செல்ல விருக்கிறார்.




லயன் புக் ஹவுஸ், நிறுவனத்தின் சார்பாக "மினி லயன்"
வெளியிடுபவரும், ஆசிரியரும் : S. விஜயன். தபால் முகவரி :
லயன் புக் ஹவுஸ், த. பெ : 55, சிவகாசி - 626 123.
ஃபோன்: 21159.


வெளியீடு எண்: 2.


படகோட்டி கிச்சு!
ஒரு படகை வாடகைக்கு எடுத்து சவாரி போகலாம்! கிச்சு!
அந்தக் கிழட்டுப் படகுகளை எவன் தொடுவது! ஐயாவைப் போன்ற சாகஸ வீரர்களுக்கு இது போன்ற போட் தான் லாயக்கு!
ஹேய்! பார்க்க மோசமாய் தெரிகிறதே!
சே! சே! சரியாக பேலன்ஸ் செய்து கொண்டால்...
.. எல்லாமே சரியாகிவிடும்!
தொபுக்


இந்த போட் நமக்கு ஏற்றதல்ல என்று தோன்றுகிறது விச்சு! பெரிய ஓட்டை உள்ளது இதில்!
இந்த செவ்விந்தியர் வகை வேகப்படகை எடுத்துக் கொள்வோம்!
ஜாக்கிரதை! ஆபத்து உள்ளது!
ஹேய்! பார்த்துப் போ!
ஹா! ஹா! ஹா! என் வேகத்தைக் கண்டு அசந்துவிட்டார்கள்!
அவர்களின் எச்சரிக்கையை கவனிக்கவில்லையா கிச்சு!
எனக்கு எச்சரிக்கைகள் தேவையில்லை! இதை எப்படி கையாளுவது என்பது எனக்குத் தெரியும்!



ஹூம்- இந்த அருவியைப் பற்றித்தான் எல்லோரும் எச்சரித்தார்கள் கிச்சு!
டமார்!
ஆபத்து அருவி
போ- போட் வந்து கொஞ்சம் சேத மாகிவிட்டது! நீ முன்னால் போய் படகுக்காரனிடம் பேசிக்கொண்டிரு நான் நொடியில் இதை சரி செய்து விடுகிறேன்!
வ-வந்து படகை சற்றே சேதமான நிலையில் வாடிக்கையாளர் திருப்-பிக்கொண்டு வந்தால் என்ன செய்வீர்கள்?
வாடிக்கையாளரை கொஞ்சம் சேதப் படுத்து வேன்!
பயல் கண்ணாடி போட்டிருக்கிறான் கவனிக்க மாட்-டான் என்று நம்புவோமாக!
முற்றும்.

## வாசகர் கடிதம்!

**R. விஜயகுமார், S.M. கோட்டை.**

துப்பாக்கி முனையில் தூள் பறத்திவிட்டது. மினி & ஜுனியர் லயனின் வருகை மற்ற காமிக்ஸ் களை படுத்துவிடச்செய்யும் போலி ருக்கிறது.

**A. M. மகாதேவன், அங்கணகவுண்டன்புதூர்.**

மினி லயன் ஏ-ஒன். லயன் காமிக்ஸ் போலவெற்றிநடைபோட்டு எவரெஸ்டில் புகழ்கொடி நாட்ட வாழ்த்துகிறேன்!

**S குங்குமராஜ், தென் சங்கம் பாளையம்.**

மினி லயன் ஒரு சூப்பர் படைப்பு. ஒரு ரூபாய்க்கு இவ்வளவு பெரிய கதையை யாருமே வெளியிட்ட—தில்லைமினிலயன் வாழ்க! வளர்க!

**R. மாணிக்கம் அரக்கோணம்.**

துப்பாக்கி முனையில் அட்டைப் படம் அற்புதமாய் இருந்தது! கதையோ அதைவிட சூப்பர்!

**C. கோபால், M. கோபி, தூத்துக்குடி,**

எப்படித்தான் இத்தனை குறைந்த விலையில் இவ்வளவு அருமையான கதையை உங்களால் வெளியிட முடிகிறதோ? பாராட்டுக்கள்!

**P. விநோத், நெல்லை-5.**

காமிக்ஸ் உலகில் புரட்சிபோல் புரட்சியாய் செய்து வரும் லயன் காமிக்ஸ்க்கும், அதன் ஆசிரியருக்கும் என் வாழ்த்துக்கள்!

**J. கிறிஸ்டோபர், கடையநல்லூர்.**

உலக அதிசயங்கள் ஏழாகயிருந்தன. லயன் திகில்முறையேஉலக அதிசயங்களுள் எட்டாவது ஒன்பதாவது இடத்தைப்பெற்றுள்ளது. இப்பொழுது 'மினி லயன் பத்தா—வதாக மலர்ந்துள்ளது. வளர்க காமிக்ஸ் உலகின் அதன் சேவை'

**அ. அப்துல் வஹாப், நாமக்கல்.**

பொங்கல் நாளில் எனக்கு கரும்பும் இனிக்கவில்லை— பொங்கலும் இனிக்கவில்லை! இனித்தது லயன் படைப்புகள்தான்!

---

**மினி லயன்** எடுத்த எடுப்பிலேயே அனைத்து வாசகர்களையும் எக்கச்சக்கமாய் கவர்ந்து விட்டது என்பது-தினமும் இங்கு குவிந்து வரும் பாராட்டுக் கடிதங்கள் மூலம் நன்றாகவே தெரிகிறது! இடப் பற்றாக் குறையின் காரணத்தால் மிகக் குறைந்தளவு கடிதங்களையே இங்கு பிரசுரித்துள்ளோம். எனினும் அடுத்த இதழிலிருந்து, வாசகர்களின், கடிதங்களுக்கு கூடுதலாக இடம் ஒதுக்கப்படும்! ஆகையால் தொடர்ந்து உங்கள் விமர்சனங்களை எழுதி அனுப்புங்களேன்!

—ஆசிரியர்—


இது என்ன கிச்சு-உடுப்பு புது மாதிரியாய் இருக்கிறதே!
பனிச் சறுக்கு ஹீரோ
விச்சு, பனிச்சறுக்கு பழகுவோர்க்கு மிகவும் பயன்படக் கூடிய உடை இது! ஐயாவின் லேட்டஸ்ட் கண்டுபிடிப்பு இதுதான்!
பார்த்தாயா-? இப்படி காற்றடைத்துக்கொண்டபின்னர், எத்தனை முறை ஐஸ் மீது இடறி விழுந்தாலும், சிறிதும் வலி தெரியாது!


இந்த "கிச்சு சூப்பர் சூட்"ன் உதவியுடன் எந்தப் பொடியனும், பனிச்சறுக்கு விளையாட்டை சுலப மாக பயின்று விடலாம்! இனி வீணாய் உடலை வருத்திக் கொள்ளத் தேவையில்லை!
இந்த உடுப்பை போட்டுக் கொண்ட பின்னர் பனியின் மீது அட்டகாசமான சர்க்கஸ் வேலைகளை செய்வது ரொம்ப சுலபம்! இதோ-
இப்படி சுழன்று, குதித்து-தாவி-அமர்க்களப்படுத்தி விடலாம்!


டமால்!
உளளப்!
க்ராக்!
நீ சொன்னது சரி தான் கிச்சு-! சர்க்கஸ் வேலைக்கு குறிப்பாக கோமாளி வேலைக்கு உன் உடுப்பு ரொம்பவும் பயன்படும்!
முற்றும்

அடுத்த வெளியீடு!





## வித்தியாசங்கள் எத்தனை?



● மேலே உள்ள இரு படங்களிடையே ஆறு வித்தியாசங்கள் உள்ளன! அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்! விடை தலைகீழாய் உள்ளது!

வித்தியாசம் : 1. காலர் டிசைன். 2. பனி மரத்தில் ஒன்று குறைகிறது. 3. பாண்டில் டிசைன் இல்லை. 4. இரண்டாவது பையனின் தொப்பி. 5. பனிச்சறுக்குக் குச்சியின் நீட்டம். 6, கால் கட்டைகளின் நீட்டம்.


BAT MAN
எட்டு சூப்பர் சித்திரக் கதை
களுடன் மே-1ல் வெளிவர-
யிருக்கும் திகில்!
கோடை மலரில்
இவர் அறிமுகமாகிறார்-!
ரோஜர் மூர், ரேம்போ,
இரும்புக்கை ஏஜெண்ட்
போன்ற இதர அற்புத
ஹீரோக்களும் இவரு-
டன் இணைந்து
சாகஸம் செய்கிறார்கள்!
உங்கள் பிரதிக்கு
இன்றே பதிவு செய்து
கொள்ளுங்கள்!


BAT MAN
எட்டு சூப்பர் சித்திரக் கதை
களுடன் மே-1ல் வெளிவர-
யிருக்கும் திகில்!
கோடை மலரில்
இவர் அறிமுகமாகிறார்-!
ரோஜர் மூர், ரேம்போ,
இரும்புக்கை ஏஜெண்ட்
போன்ற இதர அற்புத
ஹீரோக்களும் இவரு-
டன் இணைந்து
சாகஸம் செய்கிறார்கள்!
உங்கள் பிரதிக்கு
இன்றே பதிவு செய்து
கொள்ளுங்கள்!


மினி
லயன்
மரண
சர்க்கஸ்!
ரூ. 1/-